## தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை – 2013

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள், கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கிண்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை மேற்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி, அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கையின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களானவை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவு | உரிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க அதிகாரசபையினால் தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தை தோற்றுவித்து தொழில்நுட்ப அபிவிருத்திச் செயற்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அதாவது 8 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந் நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 | 2012 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகிய வாகனத்திற்காக அதிகாரசபைக்கு ஏற்பட்ட ரூபா 56,279 ஆன நிதி நட்டத்தை உரிய பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு 2013 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | • ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 20,000 ஆன எல்லையினை விஞ்சி 31 சந்தர்ப்பங்களில் ரூபா 1,287,099 கூட்டுத்தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் பதவிநிலையில்லதாத உத்தியோகத்தர்களுக்கு ரூபா 348,240 கூட்டுத்தொகையான முற்பணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் 10 ஆகும்.<br>• ஆரம்ப முற்பணத் தொகையை தீர்ப்பனவு செய்யப்<u>படாமலிருக்</u>கும் போது 25 சந்தர்ப்பங்களில் ரூபா 529,350 கூட்டுத்தொகையான முற்பணம் மீள வழங்கப்பட்டிருந்தது.<br>• முற்பணத் தேவைப்பாட்டிற்கான காரணம் மற்றும் தேவையான பணம் சரியாக இனங்காணப்படாமல் முற்பணம் வழங்கப்பட்டமையால் 45 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் 30 |

| | | |
|---|---|---|
| | | சதவீதத்திற்கு அதிகமான அதாவது ரூபா 944,330 கூட்டுத்தொகை எஞ்சியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (இ) | 2011 ஏப்ரல் 29 ஆம் திகதிய பீஈடீ/58 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபம் | தலைவருக்காக அனுமதிக்கப்பட்ட மாதாந்த படிகள் ரூபா 50,000 ஆக இருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் சனவரி மாதம் முதல் யூலை மாதம் வரை மாதாந்தம் ரூபா 62,695 படி தலைவருக்குச் செலுத்தப்பட்டிருந்தமையால், தலைவருக்குரிய படி ரூபா 88,865 உம், 10 சதவீதமான மேலதிக கொடுப்பனவாக ரூபா 8,890 உம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய செலவினமாக ரூபா 13,328 உம் ஆக ரூபா 111,083 கூட்டுத்தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகையினை மீள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2011 யூன் 01 ஆம் திகதிய என்எஸ்சீசீ/2/7/5/5/113 ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் கடிதம் | அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்தை விஞ்சிய அதிகார சபையின் பணிப்பாளருக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டமையின் காரணமாக 2012 ஆம் ஆண்டில் ரூபா 252,450 ஆன தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 252,450 தொகையும் ஆக 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 504,900 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகாரசபையின் செயற்பாடுகளின் மூலம் ரூபா 521,069 ஆன பற்றாக்குறை காண்பிக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டில் அதற்கு நேரொத்த ரூபா 2,050,079 ஆன குறையொன்றாகவிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,529,010 ஆன அநுகூலமான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டதுடன் அம்முன்னேற்றம் தொடர்பிலான வருடத்தின் அபிவிருத்திச் செலவினம் ரூபா 1,093,254 இனால் குறைவடைந்தமை மற்றும் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மானியங்கள் மற்றும் பிற்போடப்பட்ட மூலதன வருமானம் ரூபா 1,349,337 இனால் அதிகரித்தமையும் மீண்டெழும் செலவினம் ரூபா 179,004 இனால் குறைவடைந்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 வெளிப்படையான மோசடிகள்

முன்னாள் தலைவரினால் 2008 திசெம்பர் 05 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 280,000 ஆன 02 மடிக்கணனிகள் 2014 திசெம்பர் 23 வரையிலும் அதிகார சபைக்கு மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடத்தினுள் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை அடையாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வியாபார கொள்கை வரைபிற்காக 2014 திசெம்பர் 24 ஆம் திகதி வரையிலும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிடப்பட்ட மாவட்ட வியாபாரத் கூட்டமைப்பினை (DEF) ஸ்தாபிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் இலக்காகக் கொண்ட அனைத்து மாவட்டங்களிலும் கூட்டமைப்பினை உருவாக்கி முடித்தல் மற்றும் அது தொடர்பில் 75 கலந்துரையாடல் சுற்றுக்களை நடாத்துதல் ஆகிய இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. இது வரையில் 10 கூட்டமைப்புக்கள் மாத்திரம் செயற்படுகின்றதுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 300,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு அதில் 95 சதவீதமான அதாவது ரூபா 283,663 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் அடையப்படாதிருந்தது.

(இ) பட்டதாரி வியாபார பூங்காவின் கீழமைந்த 80 வெற்றிகரமான தொழில் முயற்சிகளில் 20 இனை தெரிவு செய்யும் செயற்திட்டம் தொடர்பில் ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,000 இல் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் ரூபா 234,448 வரையில் செலவிடப்பட்டிருந்தது. ஆரம்ப கலந்துரையாடல் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் எந்தவொரு வெற்றிகரமான தொழில் முயற்சியாளரும் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பூகோள ரீதியில் விசேடத்துவம் பெற்ற கைத்தொழில்களை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் மரத்தளபாடம், தும்பு, கைப்பணிப் பொருட்கள், இலகு பொறியியல், மாணிக்கக் கற்கைகளை வெட்டுதல் மற்றும் கைத்தறி புடவை போன்ற 06 கைத்தொழில்களுக்காக ரூபா 3,550,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் மரத்தளபாடம் மற்றும் மாணிக்கக் கற்களை வெட்டும் கைத்தொழில்கள் போன்றவற்றின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தில் 30 சதவீதத்திலும் குறைவான முன்னேற்றமே காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 03 மாவட்டங்களில் போட்டி வியாபார வாய்ப்புக்களை இனங்காண்பதற்கான இயலளவு அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்ததெனினும் அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு பங்களிக்கும் நிறுவனங்களை தெரிவு செய்யும் நடவடிக்கை முடிவடையாதிருந்தது.

### 4.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 09 பிரதான செயற்பாடுகள் தொடர்பில் ஒதுக்கப்பட்ட ரூபா 10,554,839 ஆன தொகை குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து அடுத்த ஆண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 14 ஆம் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செயற்திட்ட நிருவாகம்
(ஆ) நாட்குறிப்புப் பதிவுகளைப் பேணுதல்